DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.299/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | நாகராஜன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | வீராச்சாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026

1, 2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் பழைய ஜெயங்கொண்டத்தில் குடியிருந்து கரூரில் பிளைவுட் கடை வைத்துள்ளேன். அ.சா.1 தம்பி வேண்டும். ஆஜர் 1, 2 எதிரிகளை தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர்கள். 2023ம் வருடம் எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்றது. சப்பாரம் ஊரைச் சுற்றி வரும் போது எனக்கு தலைச்சுற்றல் ஏற்பட்டு நான் வீட்டிற்கு சென்று விட்டேன். அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது . போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 02.05.2023ம் தேதி இரவு 09.30 மணியளவில் அ.சா.1 மாரியம்மன் கோவில் அருகே இருந்த போது எதிரிகள் இருவரும் அ.சா.1ஐ பார்த்து ஆபாச வார்த்தைகளால் திட்டி எங்களை ஏண்டா தேர் தூக்கவிடமாட்டிறிங்க என்று சொல்லி எதிரி கோகுல் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து அ.சா.1ன் முதுகின் பின்புறம் வலது தோள்பட்டையில் வெட்டி குத்தி

தோள்பட்டையில் கிழித்து காயத்தை ஏற்படுத்தினார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பூபதி அ.சா.1 ஐ கீழே தள்ளி அ.சா.1 ன் நெஞ்சில் எட்டி உதைத்தும் இத்துடன் நீ தொலைஞ்சடா என்று கூறி மாறிமாறி அ.சா.1 ஐ அடித்தார்கள் என்றும் எதிரிகள் இருவரும் தங்கள் கையில் வைத்திருந்த அரிவாளை காண்பித்து என்னைக்கிருந்தாலும் என் கையால் தான் சாவு என்று அ.சா.1 ஐ பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:17:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.